(மேசையைத் தட்டும் ஒலி) இணையற்ற மக்கள் போற்றும் மாபெரும் தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோள்களை எட்டிடும் வகையில் தமிழ்நாட்டை வழி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தை வறுமை இல்லாத மாநிலமாக, அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கும் மாநிலமாக, எல்லாரும் எல்லாமும் பெற்று இல்லாமை இல்லாத வளம் நிறைந்த மாநிலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கிட கடந்த ஐந்து நிதிநிலை அறிக்கைகளை தன் அறிவுக்கூர்மையாலும், ஆழ்ந்த அனுபவத்தாலும் உருவாக்கி வழிநடத்தியதுபோல், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையையும் செவ்வனே உருவாக்கி, என்னை வழிநடத்தியது என் வாழ்வில் கிடைத்ததற்கரிய பெரும்பேறாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

112. இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதில் என்னுடன் அயராது பணியாற்றிய நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் அயராது பணியாற்றிய நிதித் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

113. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20

2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2016–2017, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.*

2016-2017 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநில சட்டமன்றம்	28,33,79	—	1
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	21,47,39	—	—
3	நீதி நிருவாகம்	485,48,02	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	1,762,19,72	163,39,76	1
5	வேளாண்மைத் துறை	4,229,19,75	183,04,46	97,82,50
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	701,11,15	71,66,27	1
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	258,33,34	224,60,83	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	32,57,94	45,17,60	—

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	611,49,17	68,73,60	1
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	210,92,81	–	1
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	198,69,97	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	388,64,66	74,42,78	8,04,60
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	3,709,31,81	330,64,23	1
14	எரிசக்தித் துறை	5,314,50,62	2,056,75,00	1,408,85,05
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	7,61,05	9,75,01	13,00,01
16	நிதித் துறை	726,22,76	1,300,00,00	71,15,70

2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	705,53,38	1	24,67,44
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	113,27,39	–	1
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	5,819,88,74	76,16,67	1
20	உயர் கல்வித் துறை	2,363,73,07	119,93,73	1
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	891,02,66	4,625,04,11	1
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3,657,34,22	293,15,03	13,00,02
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	147,55,22	1	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்திர்வைத் துறை)	161,81,55	20,99,68	–

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	151,04,96	3,25	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	777,52,37	390,02,61	429,00,01
27	தொழில் துறை	1,076,54,03	31,99,44	259,38,31
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	43,58,58	1	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	64,61,83	45,84,29	1
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	62,15,16	2	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	87,93,77	–	1
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	626,05,92	10,10,33	1

2016 பிப்ரவரி 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
33	சட்டத் துறை	18,42,54	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	4,691,24,10	3,055,63,42	179,35,85
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	59,36,44	–	24,38
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	157,75,99	113,51,61	1
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	69,10,22	–	–
38	பொதுத் துறை	510,35,48	3	38,47,50
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	164,31,67	471,69,42	1
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	1,133,85,08	1,253,53,88	–
41	வருவாய்த் துறை	3,774,11,38	49,11,65	1
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	11,388,62,30	638,84,63	1
43	பள்ளிக் கல்வித் துறை	15,580,62,11	552,45,13	3,51

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 16

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	193,50,71	32,77,66	1
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	2,924,81,49	3	1
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	21,28,02	—	1
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	52,55,74	1	—
48	போக்குவரத்துத் துறை	725,02,42	227,50,02	81,25,01
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	91,48,80	1,38,64	1
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	14,194,92,33	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	463,92,61	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	254,66,73	8,94	1
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1,173,30,51	—	1
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	332,85,67	77,43,44	—
	பெருமொத்தம்	**93,411,89,14**	**16,615,47,24**	**2,624,30,12**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-2-2016) புதன்கிழமை, காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 1-20 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.